<u>குளித்தலை நகராட்சி</u>

2024ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 27.ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 10.45 மணிக்கு குளித்தலை நகராட்சி நகர்மன்ற கூடத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் பற்றி முடிவுசெய்ய நகர்மன்ற அவசரக்கூட்டம் நடைபெற உள்ளது. அதுசமயம் தாங்கள் தவறாது கலந்துகொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்,
குளித்தலை நகராட்சி.

-------

**<u>நகர்மன்றத் தலைவர் அவர்கள் கொண்டுவரும் இரங்கல் தீர்மானம்-</u>**

| | |
|---|---|
| பொருள்- 01. | குளித்தலை நகராட்சி உள்ளாட்சி தேர்தலில் இரண்டாவது முறையாக வெற்றி பெற்ற 16வது நகர்மன்ற உறுப்பினரும், 16வது வார்டு தி.மு.க. செயலாளருமான திரு.அ.சுரேஷ் அவர்கள் 27.07.2024 அன்று இயற்கை எய்தினார். மற்றும் குளித்தலை நகராட்சி குடிநீர் பிரிவில் பம்ப் மெக்கானிக்காக சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்துவந்த திரு.ஆ.செல்வகுமார் என்பவர் 15.05.2024 அன்று இயற்கை எய்தினார். நகர்மன்ற உறுப்பினர் மற்றும் நகராட்சி பணியாளரின் மறைவுக்கு இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தக் கோருதல். |
| பொருள்- 02. | குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.4 நாப்பாளையம் வாய்க்கால்மேடு சுங்ககேட் பகுதியில் சுமார் 100 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். மேற்கண்ட வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்கிணங்க குடிநீர் பற்றாக்குறை தவிர்க்கும் பொருட்டு மினி பவர்பம்ப் மற்றும் அப்பகுதியில் சின்டெக்ஸ் டேங்க் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அலுவலக குறிப்பு- | 1). மன்றம் அனுமதிக்கலாம்.<br>2). மேற்கண்ட செலவினத் தொகை குடிநீர் நிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும், மேற்படி பணியினை தகுந்த ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1497/2024/இ1) |
| பொருள்- 03. | குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.4 நாப்பாளையம் வாய்க்கால்மேடு சுங்ககேட் பகுதியில் சிமெண்ட் கான்கிரீட் சாலை (TURIF 2024-2025 Pakage-1) அமைக்க வாய்க்கால் ஓரம் பலப்படுத்த வேண்டியுள்ளதால், நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்கிணங்க பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது |
| அலுவலக குறிப்பு- | 1). மன்றம் அனுமதிக்கலாம்.<br>2). மேற்கண்ட செலவினத் தொகை பொதுநிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும், மேற்படி பணியினை தகுந்த ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.1496/2024/இ1) |

..2..

பொருள்- 04. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.16, என்.ஜி.ஜி.ஓ.காலனி பகுதியில் சுமார் 200 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அப்பகுதி பொதுமக்கள் பயன்படுத்தும கழிவுநீர் தெருக்களில் வெளியேறுவதால் பொதுமக்களுக்கு சுகாதாரம் சீர்கேடு ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே, அப்பகுதியில் சிறுபாலம் அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத் தொகை பொது நிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும், மேற்படி பணியினை தகுந்த ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1398/2024/இ1)

பொருள்- 05. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19, அண்ணாநகர் பகுதியில் அமைந்துள்ள பூங்காவிற்கு தற்காலிக மின் இணைப்பு வைப்பு தொகை ரூ.60,000/- மின்சார வாரியத்திற்கு ஒப்பந்ததாரர் மூலம் கட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட வைப்புத் தொகை பணி முடிக்கப்பட்டுள்ளதால், ஒப்பந்ததாரருக்கு திரும்ப செலுத்தவும், மேலும் பூங்காவில் புட்செடிகள், பெயர் பலகை (2) அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத் தொகை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1456/2024/இ1)

பொருள்- 06. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.20ல் காவேரி நகர் அண்ணா மண்டபம் பின்புறம் கூடுதலாக ஆண்களுக்கான இரண்டு அறைகள் கொண்ட கழிவறை கட்ட நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மற்றும் நகர் மன்ற தலைவர் அவர்களின் அறிவுரைகளின் பேரில் மேற்கண்ட பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.2.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1504/2024/இ1)

பொருள்- 07. குளித்தலை நகராட்சிக்கு சொந்தமான சத்தியமங்கலம் உரக்கிடங்கில் IUDM திட்டத்தின்கீழ் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் செயல்பாட்டில் உள்ளது. மேற்கண்ட நிலையத்தில் லைட்டிங், மோட்டார் மற்றும் ஸ்டார்ட்டர் ஆகியவை பொருட்கள் இல்லாமல் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் செயல்படுத்த இயலாத நிலை ஏற்படும் என்பதால் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பொருட்கள் புதியதாக வாங்கி பொருத்தும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவல குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத் தொகை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1458/2024/இ1)

-------

# குளித்தலை நகராட்சி
## குளித்தலை நகர்மன்றத்தின் 27.08.2024ஆம் தேதிய அவசரக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 112 | நிறைவேற்றப்பட்டது. |
| 2 | 2 | 113 | அனுமதிக்கப்பட்டது. |
| 3 | 3 | 114 | அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 115 | அனுமதிக்கப்பட்டது. |
| 5 | 5 | 116 | அனுமதிக்கப்பட்டது. |
| 6 | 6 | 117 | அனுமதிக்கப்பட்டது. |
| 7 | 7 | 118 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/-P.சகுந்தலா,
நகர்மன்றத் தலைவர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல்/

ஆணையர்,
குளித்தலை நகராட்சி.